# யாவரும் கேளீர்

Search

வியாழன், 17 மார்ச், 2022

## செம்மொழி வரலாறு - உரைப்பகுதி (Text)

**செம்மொழி வரலாறு**

ஒலிகள், கை அசைவுகள், குறியீடுகள் ஆகியன ஒரு மொழியின் உருவாக்கத்திற்கு அடிப்படை அலகுகளாக அமைகின்றன. கற்பனைத் திறன், தூண்டுகோல், உற்பத்தித்திறன், இடப்பெயர்ச்சி அதன் வளர்நிலைக்கு உதவும் முக்கிய காரணிகளாகும். பேச்சு, எழுத்து, புரிதல், விளக்கம் ஆகிய திறன்கள் மொழி கற்கையில் இன்றியமையாத கூறுகளாகும். சிறந்த வாழ்வியற் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் கொண்டுள்ள மொழிகள் நிலைத்து நிற்கும் பேறுகளைப் பெறுகின்றன. மாற்றத்திற்கும் மேன்மையுறுதலுக்கும் இடங்கொடுக்காதவை காலப்போக்கில் வழக்கொழிந்து போகின்றன. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. மொழியை அறிவியல் அடிப்படையில் கற்கும் துறையை மொழியியல் துறை என்கிறோம். புரிந்து கொள்ளுதல், ஒலிப்பு முறை, வாக்கிய உருவாக்கம், நினைவாற்றல் இழப்பு ஆகியவற்றில் மூளையின் உறுப்புகள் தாக்கம் செலுத்துகின்றன. மொழியின் நரம்பியல் அம்சங்கள் குறித்த கல்வி நரம்பியல் விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகிறது.

**பண்பாட்டுத் தாக்கம்**

அர்த்தங்கள், குறியீடுகள், அறிகுறிகள் மொழியின் கட்டமைப்புகளாக விளங்குகின்றன. ஒலிகள், செய்கைகள், எழுத்து வரிகள் அறிகுறிகளின் வெளிப்பாடுகளாகும். குறிப்பிட்ட சமுதாயத்தின் விவாத நெறிமுறையாக அங்கு பேசப்படும் மொழி திகழ்கிறது. உச்சரிப்புகள், பொருள், இலக்கண மரபு ஆகியன அந்தந்த இடங்களின் கலாச்சாரத்தின் மூலமாக மொழிகள் தங்களுக்குள் வேறுபடுகின்றன. ஒரே வகையான கலாச்சாரத்தைப் பின்பற்றுவோர் மொழியின் வெவ்வேறு சைகைகளையும் அசைவுகளையும் பின்பற்றுவதே வட்டார வழக்குகளைத் தோற்றுவிக்கின்றன. பிறப்பிடம், பொருளாதார வேறுபாடு, இரண்டாவது மொழி நிலை ஆகியனவும் மொழியின் பயன்பாட்டில் வேறுபாடுகளை ஏற்படுத்தும்.

**செம்மொழிகள்**

இலக்கியத் தொன்மை, பண்புத் தகுதிகள், பிற மொழிகளைச் சாராத தோன்றல் நிலை ஆகியவை ஒரு மொழியின் செவ்வியல் தன்மைகள் என ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள் குறிப்பிடுகிறார். தனித்துவமான தொன்மையான இலக்கிய மரபு கொண்ட மொழிகள் செம்மொழிகளாகக் கருதப்பெறுகின்றன.

இந்த வலைப்பதிவில் தேடு

Search

- Home

மார்ச் 2022 (13)
ஏப்ரல் 2022 (10)
ஜூன் 2022 (4)
செப்டம்பர் 2022 (1)
அக்டோபர் 2022 (19)

இந்த வலைப்பதிவில் தேடு

Search

என்னைப் பற்றி



யாவரும் கேளீர்

பாடக்குறிப்புகளின் களம்

எனது முழு சுயவிவரத்தைக் காண்க

முறைகேடு எனப் புகாரளி

வலைப்பதிவு காப்பகம்

அக்டோபர் 2022 (19)
செப்டம்பர் 2022 (1)
ஜூன் 2022 (4)
ஏப்ரல் 2022 (10)
மார்ச் 2022 (13)

ஐய்ரோப்பிய மரபில் கிரேக்கம், இலத்தீன் ஆகியன செவ்வியல் தகுதிகள் பெற்ற மொழிகளாக விளங்குகின்றன. உலகளாவிய அளவில் செலுத்தும் கவனம் காரணமாக சீனம், அறபி, சமற்கிருதம் ஆகியவற்றையும் செம்மொழிகளாக கருத வேண்டும் என்கிறார் எட்வர்ட் சாபிர் என்பார். மேலும் பாரசீக மொழி, ஹிப்று, பிரெஞ்சு மொழி ஆகியனவும் பெருமளவில் கலாச்சாரப் பங்களிப்புச் செய்த காரணத்தினால் செம்மொழிளாக அங்கிகரிக்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. மேற்கூறப்பட்ட மொழிகள் அல்லாமல் சுமேரிய மொழி, எகிப்திய மொழி, பாபிலோனிய மொழி, தமிழ், பாலி, அராமிக் ஆகியவை வளமான வீரயுகம் சார்ந்த மொழிகள் என்ற அடிப்படையில் செவ்வியல் தகுதிகளைப் பெறுகின்றன. கொரிய மொழி, ஆர்மினியன் மொழி ஆகியன பழமை நோக்கில் சிறப்பிடம் பெறுகின்றன.

### மொழிக் குடும்பங்களும் செம்மொழிகளும்

திராவிட மொழி குடும்பத்தைச் சார்ந்த தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளும் இந்தோ ஐய்ரோப்பிய மொழிகள் குடும்பத்தைச் சார்ந்த கிரேக்கம், சமற்கிருதம், இலத்தீன், பாரசீக மொழி ஆகியனவும் ஆப்ரிக்க ஆசிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த அறபி, எபிரேயம் ஆகிய மொழிகளும் சீனோ திபெத்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சீன மொழியும் செம்மொழிகள் என உலக அறிஞர்களால் போற்றப்படுகின்றன.

உலக மொழிகளில் 90% மொழிகள் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்களால் பேசப்படுபவை. பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களால் 200 மொழிகள் பேசப்படுகின்றன. 357 மொழிகள் ஐம்பதிற்கும் குறைவான மக்களால் பேசப்படுகின்றன. ஒருவருக்கு மட்டுமே தெரிந்த மொழிகள் 46 ஆகும். உலக நாடுகளின் கல்வி சமூக கலாச்சார அமைப்பு 2020 ஆண்டில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இந்த விபரங்களைத் தெரிவிக்கிறது. ஒரு மொழியின் அழிவு என்பது ஓர் இனத்தின் அழிவு மட்டுமல்ல ஒரு பண்பாட்டின் அழிவு என்பதை உணர்தல் வேண்டும்.

### தமிழ் மொழியின் வாழும் தன்மைகளும் செம்மொழித் தகுதிகளும்

திராவிட மொழிக் குடும்பத்தின் தொன்மையான மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழி பேச்சு மொழியாக விளங்குகிறது. 1997 ஆம் ஆண்டின் கணக்கின்படி 8 கோடி மக்களால் தமிழ் மொழி பேசப்படுகிறது. சுமார் 8 மில்லியன் மக்கள் இம்மொழியை இரண்டாம் மொழியாக பயன்படுத்தியுள்ளனர். 2017 ஆம் ஆண்டின் தகவலின்படி இணைய பயன்பாட்டில் இந்திய மொழிகளில் முதலிடம் வகிக்கிறது தமிழ் மொழி. தமிழகத்தில் மட்டுமின்றி புதுச்சேரி, அந்தமான் நிகோபர் போன்ற பகுதிகளிலும் அரசு அலுவல் மொழியாகவும் விளங்கி வருகின்றது. மொரிசீயசு, ரீயூனியன் பிரதேசங்களில் தமிழ் அங்கிகரிக்கப்பட்ட சிறுபான்மை மொழியாக உள்ளது.

### செவ்வியல் தன்மை கொண்ட இலக்கிய இலக்கண நூற்கள்

- தொல்காப்பியம்

### எட்டுத்தொகை நூற்கள்

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப் பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமொழி நூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக் காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**காப்பியங்கள்**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

**சிற்றிலக்கியம்**

- முத்தொள்ளாயிரம்

**இலக்கண நூல்**

- இறையனார் களவியல்

மேற்கூறப்பட்ட 41 நூல்கள் தமிழ் மொழிக்குச் செம்மொழி அங்கிகாரம் கிடைக்கப்பெற காரணமாக இருந்த செவ்வியல் தன்மைகள் கொண்ட இலக்கண இலக்கிய நூற்களாகும்.

**செம்மொழித் தகுதிகள்**

ஒரு மொழிக்குச் செம்மொழி என்ற தகுதி அளிக்கப்பெற பின்வரும் பதினொரு தன்மைகள் தேவையாகும். இத்தகுதிகள் தமிழ்மொழிக்கு எங்கனம் பொருந்துகின்றன என்பதை உரிய சான்றுகளுடன் இங்கு காணலாம்.

**தொன்மை**

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் பகுதியில் ஜம்பை என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். கி.பி. 160 காலகட்டத்தைச் சேர்ந்த சாதவாகனா பேரரசு நாணயத்தில் தமிழ் பிராமி எழுத்துகள் இடம்பெற்றுள்ளன. ஜம்பை கல்வெட்டைப் போன்றே மாங்குளம் கல்வெட்டும் தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்டதாகும். இந்த கல்வெட்டு பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். 2500 ஆண்டுத் தொன்மைச் சான்றுகள் தமிழ் மொழியின் சிறப்புக் கூறுகளாகும். தொல்காப்பியச் சுவடி கி.மு. 4-3 நூற்றாண்டுகளைச் சார்ந்ததாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அண்மைக்கால ஆராய்ச்சிகள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தனித்தன்மை**

இயல், இசை, நாடகம் என முத்தமிழ் போற்றப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் அக இலக்கியங்கள் புற இலக்கியங்கள் என பகுக்கப்பட்டுள்ளன. பழந்தமிழர் நாகரிகம் ஐந்திணைப் பாகுபாடுகளைக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பகுப்புமுறைகள் பண்டைய தமிழரின் அறிவியல் சிந்தனைப் போக்கையும் மிகைப்படுத்தப்படாத சமுதாய வாழ்வையும் பிரதிபலிப்பது தமிழ் மொழியின் தனித்துவ நிலையாக காணமுடிகிறது. மேலும் தன்னிரகற்ற தலைவர்களைக் காப்பிய முதன்மை மாந்தர்களாக கொள்ள வேண்டும் என்ற காப்பிய மரபைப் பின்பற்றாமல் சாதாரண குடிமக்களை மாந்தர்களாக கொண்டுள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பியங்களும் தமிழ்மொழியின் தனித்துவத்திற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**பொதுமைப் பண்பு**

சமயச் சார்பில்லாத பொதுமைத் தன்மைகள் தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்புகளாகும்.

**“சமயக் கணக்கர் மதிவழி கூறாது**

**உலகியல் கூறி பொருளிது வென்ற”**

எனும் கூற்று திருக்குறள் சமயவழி சாராத பொது நூல் என்று பறைசாற்றுகிறது. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் சேரநாட்டு இளவரசர், வஞ்சி மாநகரைச் சார்ந்தவர். மூவேந்தர் ஒற்றுமை தமிழர் ஒற்றுமையாக ஓங்க வேண்டும் எனக் கனவு கண்டவர். அதனால்தான் தாம் இயற்றிய காப்பியத்தைப் புகார், மதுரை, வஞ்சி என்று மூன்று காண்டங்களாகப் பகுத்தார். இது தமிழரின் பொதுமைப் பண்பிற்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

**நடுவுநிலைமை**

இனம், மொழி, சமூகம் என்ற பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நாகரிகம் தமிழரின் பண்டைய நாகரிகம் என்பதை,

**“யாயும் ஞாயும் யாராகியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே”**

என்ற குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கிறது. மேலோட்டமாக வாசித்தால் தலைமகனுக்கும் தலைமகளுக்கும் இடையிலான காதலுணர்வை வெளிப்படுத்தும் கூற்றாக இது தெரியலாம். ஆனால் சமூகத்தில் உள்ள பாகுபாடுகளை இப்பாடல் கேள்விக்குட்படுத்துகிறது. அடையாள மறுப்பு என்ற சிந்தனை இங்கு புலப்படுகிறது. இப்பாடலை இயற்றிய புலவர் தம் இயற்பெயரால் அழைக்கப்படாமல் பாடல் தொடரை அடிப்படையாகக் கொண்டு செம்புலப் பெயல் நீரார் என் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. எந்த வகையான பிரிவுகளின் அடையாளங்களுக்கும் உட்படாத நடுவுநிலைமையைச் சங்கப் புலவர்கள் கடைப்பிடித்தனர்.

**தாய்மைத் தன்மை**

வடபுல மலைவாழ் மக்கள் பேசும் பிராகுயி மொழி தொடங்கி தென்புல மலைநாட்டில் பேசப்படும் மொழி வரையிலான 42 மொழிகளுக்குத் தமிழ் மொழி தாய்மொழியாக விளங்குகிறது. இந்திய, ஆசிய, ஆப்ரிக்க, ஐய்ரோப்பிய மொழிகள் பலவற்றிலும் தமிழ் மொழியின் வேர்ச்சொற்களின் தாக்கம் உள்ளதை தேவநேயப்பாவாணர் கண்டறிந்துள்ளார். சைவம், வைணம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்துவம் என அனைத்துச் சமயங்களின் சிந்தனைகளையும் அரவணைத்துது தாய்மையுள்ளத்தை வெளிப்படுத்தி வருகிறது தமிழ் இலக்கிய மரபு.

**பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு**

தமிழ் இலக்கியம் மிகச்சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட கருவூலமாக விளங்குகிறது.

**“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**

**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்”**

என்ற நற்றிணைப் பாடல் வரிகள் நாகரிகம் என்றால் என்ன என்பதை விளக்குகிறது. இயற்றமிழோடு இசையும் நாடகமும் இணைத்தே முத்தமிழாக தமிழ்மொழி போற்றப்பட்டு வந்துள்ளது என்பதன் மூலம் தமிழர் கலைச் சிறப்பை அறிய இயலும். தமிழரின் பண்டைய கட்டிடக் கலையும், சிற்பக் கலையும் செவ்வியல் தன்மைகளுக்கு உறுதுணையாக உள்ளன. எழுத்திலக்கணம், எழுத்தாற்றல், கணிதவியல் என அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களைத் தூய தமிழ்ச் சொற்களில் பட்டியலிடுகிறார் தேவநேயப் பாவாணர். மனித அனுபவங்களின் வெளிப்பாட்டிற்கு அகத்திணைப் பாடல்கள் சான்றுகளாக விளங்குகின்றன.

**பிறமொழித் தாக்கமில்லாத தனித்தன்மை**

தமிழ் மொழியின் வலுவான வேர்ச்சொற்திறன் பிறமொழிக் கலப்பில்லாத தன்மைக்கு முக்கிய காரணமாக உள்ளது. புதிய சூழல்களுக்குத் தகுந்தவாறு தன்னிடம் உள்ள வினைச் சொற்களை வைத்துப் புதிய சொற்களை இது உருவாக்கிக் கொள்கிறது. சொற்களைத் தேடிப் பிற மொழிகளைத் தமிழ் மொழி நாடுவதில்லை. இதற்குக் 'கணினி' என்ற சொல் சிறந்த சான்றாகும்.

**"வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ**

**எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"**

என்ற தொல்காப்பிய நூற்பா பிற மொழிச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்கும் முறையைச் சுட்டுகிறது. வடமொழிச் சொற்களான 'ராம்', 'சீதா' போன்ற பெயர்களை 'இராமன்', 'சீதை' எனக் கம்பர் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**இலக்கிய வளம்**

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் சங்க இலக்கியங்கள் தோன்றியுள்ளன என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அன்பும் வீரமும் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தும் விழுமியச் செல்வங்களாகும். காலந்தோறும் தமிழ்மொழியில் தோன்றிய அனைத்துவகை இலக்கியங்களும் கருத்து வளம் மிகுந்ததாக காணப்படுகின்றன. நீதி இலக்கியங்கள் அறவுணர்வையும் காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் பக்தி இலக்கியங்கள் தத்துவ சிந்தனைகளையும், சிற்றிலக்கியங்கள் அடித்தட்டு மக்களின் வாழ்வியலையும் படைப்பிலக்கியங்கள் மனித நேயத்தையும் புலப்படுத்தின.

**உயர் சிந்தனை**

இரண்டாயிரம் ஆண்டுகள் தமிழ் இலக்கிய மரபு பல உயரிய சிந்தனைகளை வெளிப்படுத்தி வந்துள்ளன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' போன்ற உயரிய சிந்தனைகளைத் தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்தி வந்துள்ளன.

**மொழிக் கோட்பாடு**

தொல்காப்பியம் நூல் தமிழில் தோன்றிய நூல்களுல் மிகப் பழமையானது, இன்று வரையிலும் தமிழின் பழம்பெருமைக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு நூலாகும். மொழியியல் கோட்பாடுகளின் முன்மாதிரியாக இந்நூல் நுவலும் செய்திகளைக் கண்டு வியக்கிறார் மொழியியல் துறையின் தந்தை எனப் போற்றப்படும் எமினோ அவர்கள்.

மேற்கூறிய சான்றுகள் வாயிலாக தமிழ்ச் செம்மொழியின் தகுதிகளை அறிய முடிகிறது.

### தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு வரலாறு

பாரினில் இனிய மொழி தமிழ் மொழி. இம்மொழியைச் செம்மொழியாக அறிவிக்க நடைபெற்ற முயற்சிகள் 150 ஆண்டுகால நெடிய வரலாற்றைக் கொண்டது. 'செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்' என்னும் தம் நூலில் உடன்பிறப்பிற்கு எழுதும் கடிதங்களின் வடிவில் தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

கால்டுவெல் அவர்கள் கி.பி.1856 ஆம் ஆண்டு எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative Grammer of Dravidian languages) என்னும் ஆங்கில நூல் திராவிட மொழிகளின் தனிச்சிறப்பை உலகிற்கு உணர்த்தியது. 1902 ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் தலைப்பில் பரிதிமாற் கலைஞர் அவர்கள் "தென்னாட்டின்கண் சிறந்து ஒளிர்கின்ற நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியே திண்ணம்" என்று தமிழைச் செம்மொழி என ஆராய்ந்துத் தெளிந்தார். அவர் எழுதிய 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூலில் "திருந்திய பண்பு சீர்த்த நாகரிகம் பொருந்திய தூயமொழி புகல் செம்மொழியாம்" எனத் தமிழ் மொழியை உயர்மொழி தனிமொழி என மதிப்பிட்டார்.

### தமிழ் அமைப்புகளின் பங்களிப்பு

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் மற்றும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை ஆகியன 1918 ஆம் ஆண்டு நடத்திய மாநாடுகளில் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் எனத் தீர்மானங்களை நிறைவேற்றின.

தமிழைச் செம்மொழியாக அறிவிப்பதில் தஞ்சை மாவட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பங்களிப்பு மிகுதியானது. 1919-23 காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெற்ற மாநாடுகளில் தமிழ்ச் செம்மொழி கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றபட்டதோடு 2003, 2004 ஆண்டுகளில் பேரணியும் கையெழுத்து இயக்கமும் தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்புக்காக இந்த அமைப்பு நடத்தியது குறிப்பிடத்தக்கது. தலைநகர்த் தமிழ்ச்சங்கம், டெல்லித் தமிழ்ச்சங்கம், பெங்களூர் தமிழ்ச்சங்கம். திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் தொடர்ச் செயற்பாடுகள் தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு கோரிக்கை வலுவடைய காரணமாகியது. 2003 ஆகஸ்ட் திங்கள் 18ஆம் நாள் தில்லி தமிழ் அமைப்புகள் நடத்திய உண்ணா நிலை அறவழிப் போராட்டம் தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள், அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின்

பங்களிப்பையும் ஆதரவையும் பெற்றது. இதே ஆண்டு சென்னையில் தமிழ் மொழி அகாதெமியின் பத்தாவது தேசிய மொழிகள் மாநாட்டிலும் தமிழ்ச் செம்மொழி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

### அறிஞர்களின் பார்வை

சாகித்ய அகாதெமி உருவாக்குவதற்காக 1951 ஆம் நடைபெற்ற மாநாட்டில் இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அப்துல் கலாம் ஆஸாத் அவர்கள் "தமிழ் மொழி செழுமையும் தொன்மையும் மிக்க இலக்கியத்தைக் கொண்டது. தமிழ் செம்மொழி என அங்கிகாரம் செய்வதற்குரிய தகுதிப்பாடுகள் அனைத்தும் பண்டைய காலத்தைச் சார்ந்தவை" எனத் தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய கீழ்த்திசை மொழிகள் மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தமிழ்ச் செம்மொழி கோரிக்கையை வலியுறுத்தி உரை நிகழ்த்தினார். 1966 ஆம் ஆண்டு மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'உலகின் முதன்மை உயர்தனிச் செம்மொழி' (The Primary Classical Language of the World) என்னும் நூலும் தமிழின் செவ்வியல் தகுதிகளைப் பறைசாற்றியது. மணவை முஸ்தபா எழுதிய 'செம்மொழி உள்ளும் புறமும்' என்னும் நூல் தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளை நிறுவியது. வெறும் உணர்ச்சியளவில் அல்லாமல் கோட்பாடு ரீதியாக 'உயர்தனிச் செம்மொழியாக ஒளிரும் தமிழ்' என்னும் தலைப்பில் மொழியியல் அறிஞர் முனைவர் சி.ஜான் சாமுவேல் தமிழ் அறிஞர்கள் பலரின் துணையோடு தயாரித்த 'தமிழ்ச் செம்மொழி கோரிக்கை வரைவு அறிக்கை' தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு முயற்சிகளில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அமெரிக்கத் தமிழ் அறிஞர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள் தமிழ்ச் செம்மொழி கோரிக்கையை ஆதரித்து வெளியிட்ட அறிக்கை உலகளாவிய கவனத்தை ஈர்த்தது.

### பல்கலைக்கழகங்கள்

அண்ணா பல்கலைக்கழகம் வளர்தமிழ் மன்றம் பாரதி அறக்கட்டளை சார்பில் 'அறிவியல் யுகத்திற்குத் தமிழ்' என்னும் தலைப்பில் 1988 ஆம் ஆண்டு நடத்திய கருத்தரங்கம் செம்மொழித் தீர்மானத்தை முன்மொழிந்தது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியன 1996 ஆம் ஆண்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம் எனப் பரிந்துரைத்துத் தீர்மானங்களை நிறைவேற்றி தமிழக அரசிற்கு அனுப்பி வைத்தன. 2001 - 2002 முதல் தமிழைச் செம்மொழியாக நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தை சென்னைப் பல்கலைக்கழகம் முன்மொழிந்ததும் குறிப்பிடத்தக்கது.

### அரசியற் செயற்பாடு

ஒரு முதலமைச்சர் என்ற முறையிலும் ஓர் அரசியல் தலைவர் என்ற முறையிலும் தமிழ்ச் செம்மொழி கோரிக்கையை நடுவணரசிடம் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்வைத்தார். 2003 ஆம் ஆண்டு தி.மு.க.வின் விழுப்புரம் மண்டல மாநாடு தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கையை

முன்மொழிந்ததோடு தொடர்ந்து தமிழகத்தின் பல மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்ச் செம்மொழி ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் அந்த அரசியலமைப்பின் இலக்கிய அணி சார்பாக நடத்தப்பெற்றது.

இவ்வாறு தொடர் முயற்சிகளின் விளைவாக 07-06-2004 அன்று இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்கள் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். தொடர்ந்து 12-10-2004 அன்று தமிழ் மொழியைச் செம்மொழியாக பிரகடனம் செய்து இந்திய நடுவணரசு அறிக்கை வெளியிட்டது. தமிழ்ச் செவ்வியல் ஆய்வுகளை முன்னெடுக்க செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 2008 ஆம் ஆண்டு முதல் சென்னையில் இயங்கி வருகின்றது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் கோலாகலமாக நடைபெற்றது.

**துணைநின்ற நூல்களும் இணையதளங்களும்**


1. கலைஞர் மு.கருணாநிதி, செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை 2010, issu.com
2. மணவை முஸ்தபா, செம்மொழி உள்ளும் புறமும், அறிவியல் தமிழ் அறக்கட்டளை, சென்னை, 2004
3. kalloorithamizh.blogspot.com
4. senthoorantamil.blogspot.com
5. ta.m.wikibooks.org
6. ta.m.wikipedia.org
7. times of india.indiatimes.com



நேரம் மார்ச் 17, 2022

## கருத்துகள் இல்லை:

## கருத்துரையிடுக

கருத்து வழங்க, கீழே உள்ள பட்டனைக் கிளிக் செய்து Google மூலம் உள்நுழைய வேண்டும்.

GOOGLE மூலம் உள்நுழைக

புதிய இடுகை முகப்பு பழைய இடுகைகள்

இதற்கு குழுசேர்: கருத்துரைகளை இடு (Atom)

### ஊடகவியல் வினா வங்கி

M.A., Question Bank

சிலப்பதிகாரம் (அடைக்கலக்காதை) உரைப்பகுதி (Text)
Generic Elective - II Advanced Tamil - II சிறப்புத் தமிழ் தமிழ் இலக்கியங்களும் வரலாறும்- II அலகு - 1 சிலப...

பொதுத் தமிழ் பருவம் - 1; வினா வங்கி
Part -I; Tamil-I; Semester-1;Question Bank (20U1LT1)

சாதாரணம் தீம். Blogger இயக்குவது.